**செய்தி வெளியீடு எண். 71** **நாள்: 01.02.2018**

**மேல்நிலை இரண்டாமாண்டுக்கான செய்முறைத் தேர்வுகள் 02.02.2018 முதல் 13.02.2018 வரை நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்தில், மேல்நிலை இரண்டாமாண்டுக்கான செய்முறைத் தேர்வுகள் 02.02.2018 முதல் 13.02.2018 வரை நடைபெறவுள்ளது. இத்தேர்வுகளுக்காக பொன்னேரி கல்வி மாவட்டத்தில் 114 தேர்வு மையங்களும், திருவள்ளூர் கல்வி மாவட்டத்தில் 95 தேர்வு மையங்களும் ஆக மொத்தம் 209 செய்முறைத் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இச்செய்முறைத் தேர்வில் பொதுக் கல்வியில் 34,329 தேர்வர்களும், தொழிற்கல்வியில் 1835 தேர்வர்களும் ஆக மொத்தம் 36164 செய்முறைத் தேர்வு எழுதவுள்ளனர். ஒவ்வொரு செய்முறைத் தேர்வு மையத்திற்கும் அறிவியல் பாட முதுகலை ஆசிரியர்களை புறத் தேர்வாளர்களாக பொதுக்கல்விக்கு 808 முதுகலை ஆசிரியர்களும், தொழிற் கல்விக்கு 64 தொழிற்கல்வி ஆசிரியர்களையும் ஆக மொத்தம் 872 ஆசிரியர்கள் பிற பள்ளிகளிலிருந்து (External Examiner) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். செய்முறைத் தேர்வு மையங்களில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்கள், மெட்ரிக் பள்ளி முதல்வர் முதன்மைக் கண்காணிப்பாளர்களாக செயல்படுவர். செய்முறைத் தேர்வுகள் நடைபெறவுள்ள நாட்களில் முதுன்மைக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர் பார்வையிடவுள்ளனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**